பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 08 | செவ்வாய்க்கிழமை | 21.01.2025 | அதிர்வு 172

## மன்னார் துப்பாக்கிச்சூடு:

## 3 சந்தேகநபர்களும் இன்று குற்ற ஒப்புதல் வாக்குமூலம்



மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக இருவரைச் சுட்டுக்கொலை சம்பவத்துடன் 05



### சட்டத்தின் பிடியில் இருந்து

# ராஜபக்ஷக்கள் தப்பவே முடியாது!

### அநுர அரசு திட்டவட்டம்

ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ஷக்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது என்று இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்தார்.

ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடி ஆட்சியே அவர்களின் படுதோல்விக்குப் பிரதான 05

# மஹிந்த சிங்கம்!



## புலிகளுக்கு முடிவு கட்டிய அவர் ஒருபோதும் திணறமாட்டார் என்று மனோஜ் வீராப்பு பேச்சு

"விடுதலைப்புலிகளுக்கு முடிவு கட்டிய மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் திணறமாட்டார். அவர் ஒரு சிங்கம்."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின்ஊடகப்பேச்சாளர் மனோஜ் கமகே தெரிவித்தார். 05

# நாட்டை அழித்த ராஜபக்ஷக்கள் இனிமேல் மீண்டெழவே முடியாது!

### பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவிப்பு



"கொலைகளை, ஊழல், மோசடிகளைச் செய்து நாட்டை அழித்த ராஜபக்ஷக்கள் இனிமேல் மீண்டெழ முடியாது."

– இவ்வாறு விவசாயம் மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ராஜபக்ஷக்கள் அரசியலில் இருந்து தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள். 05

# யாழில் 108 கிலோ கேரள கஞ்சாவுடன் நால்வர் சிக்கினர்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – குருநகர் பகுதியில் 108 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் 4 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

குருநகரைச் சேர்ந்த 05




'யாழ்ப்பாணம் கலாசார நிலையம்' திடீரென – திடுதிப்பென – யாருக்கும் தெரியாமல் – சத்தம் சந்தடியின்றி – 'திருவள்ளுவர் கலாசார மையம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டமை பல தரப்புகளிலும் அதிர்வுகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான திறந்தவெளி அரங்க நிலத்தில் இந்திய அன்பளிப்பில் கட்டப்பட்ட இந்தக் கலாசார நிலையத்தை யாழ் மாநகர சபையிடம் கையளிக்க விடாமல் மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கு பகீரதப் பிரயத்தனங்கள் நடந்து வருகின்ற பின்னணியிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கலாசார மண்டப திறப்பு விழாவாகட்டும் அல்லது அதன் பின்னரான மண்டப நிர்வாகமாகட்டும் அல்லது இப்போதைய பெயர் மாற்றமாகட்டும் யாவற்றிலுமே யாழ் மாநகர சபையின் பங்களிப்பு இல்லாத ஒரு சூழல் நீடிப்பதை அவதானிக்க முடிகிறது. அதுவும் யாழ் மாநகர சபைக்கான மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சமயத்தை வசமாகப் பயன்படுத்திக் கொண்டு 05



# விமான நிலையத்தில் நேற்று பாரிய வெடிப்பு

## பறவை ஆபத்து கட்டுப்பாட்டுப் பிரிவை சேர்ந்த மூன்று அதிகாரிகள் படுகாயம்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதைக்கு மேலே உயரமாகப் பறந்து கொண்டிருந்த பறவைக் கூட்டத்தின் மீது சுடப்பட்ட ஸ்கை ஸ்டிக் வகை வெடிபொருள் வெடிக்கத் தவறி, அதிகாரிகள் பயணித்த வாகனத்தின் மீது விழுந்ததால், நேற்று மதியம் விமான நிலையத்தில் ஒரு பாரிய வெடிப்பு ஏற்பட்டது.

பறவை ஆபத்து கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் படுகாயமடைந்து நீர்கொழும்பு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதைக் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொறுப்பதிகாரி உறுதிப்படுத்தினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் விலங்கு மற்றும் பறவை ஆபத்து கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளுக்கு நேற்று பகல் 11.45 மணியளவில் விமான நிலைய ஓடுபாதைக்கு மேலே வானத்தில் பறவைகள் கூட்டம் பறந்து வருவதாகவும், இதனால் விமான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்தது.

அதன்படி, மூன்று அதிகாரிகள் வாகனத்தில் ஓடுபாதைக்குச் சென்று, பறவைக் கூட்டத்தைப் பயமுறுத்துவதற்காக ஸ்கை ஸ்டிக் போன்ற வெடிபொருட்களைக் கொண்ட துப்பாக்கிச்சூடுகளை நடத்தினர். அந்த குண்டு வெடிக்காமல், அதிகாரிகள் பயணித்த வாகனத்தின் மீதே விழுந்தது.

வாகனத்தில் இதுபோன்ற பல ஸ்கை ஸ்டிக் போன்ற வெடிபொருட்கள் இருந்ததனால் அவை ஒரே நேரத்தில் வெடித்து திடீரெனத் தீப்பிடித்தன.

அதேநேரத்தில், கட்டுநாயக்க விமான நிலையத் தீயணைப்புத் துறையின் அதிகாரிகள் தீயை அணைக்கப் பல தீயணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தினர்.

இந்தச் சம்பவத்தின் விளைவாக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் விலங்கு மற்றும் பறவை ஆபத்து கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் படுகாயமடைந்து நீர்கொழும்பு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர், மேலும் அதிகாரிகள் பயணித்த கப் வாகனமும் சேதமடைந்துள்ளது.

# பொலிஸ் விசேட பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமனம்

பொலிஸ் விசேட பாதுகாப்புப் பிரிவின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான பிரதிப் பொலிஸ் மாஅதிபராக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஜகத் விஷாந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இந்த நியமனத்தை வழங்கியுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஜகத் விஷாந்த இதற்கு முன்னர் மட்டக்களப்பு பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றினார்.

மட்டக்களப்பு பிராந்தியத்திற்கான கடமைகள் அம்பாறை பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர்



எச் . சமுத்ரஜீவவினால் நிறைவேற்றப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க குறிப்பிட்டுள்ளார்.




# வெள்ளத்தில் சிக்கி இளம் குடும்பஸ்தர் சாவு!

வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துக்கள் எனும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சேனபுர பகுதியில் திருமணம் முடித்துள்ள வாழைச்சேனை – பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய றிஸ்வான் எனும் நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

தனது மனைவி மற்றும் உறவினர் ஒருவருடன் அந்நபர் செல்லும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரப்பொல – முத்துக்கல் வழியாக சேனபுர பகுதிக்கு செல்லும்போது மூவரும் வெள்ளநீரில் அகப்பட்டுள்ளனர்.

அதில், இளம் குடும்பஸ்தர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், அவரது மனைவி மற்றும் மற்றைய நபர் மரக்கிளை ஒன்றைப் பிடித்து உயிர் தப்பியுள்ளனர்.

மரணமடைந்த நபரின் உடல் மருத்துவப் பரிசோதனைக்காக வெலிகந்தை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊழல் வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் தேவை!

## ஜனாதிபதியிடம் மனோ எம்.பி. கோரிக்கை



“இலங்கையில் ஊழல் தொடர்பான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பரிசீலிக்க வேண்டும்.”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் ஊழலுக்கு எதிரான முயற்சிகளை வரவேற்கின்றேன்.

பொலிஸ், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, சட்டமா அதிபர் மற்றும் நீதித்துறை ஆகியவை குடியரசு ஜனநாயக நாட்டில் மக்கள் நம்பிக்கை வைக்கும் நிறுவனங்களாகும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கோப்புகளை இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு மீண்டும் திறந்து, இம்மாத இறுதியிலும் பெப்ரவரியிலும் வழக்குகளைத் தாக்கல் செய்யும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

இலஞ்ச ஆணைக்குழுவுக்கு (அதன் சட்ட அதிகாரங்களை வலுப்படுத்துதல் உட்பட) சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அதிக ஆதாரங்களை வழங்குவதன் மூலம் தேக்கநிலையை நீக்க வேண்டும்.

மேலும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு அதிக ஆதாரங்களை வழங்க வேண்டும்.

அதேவேளை, ஊழல் தொடர்பான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதையும் ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டும், இதனால் வழக்குகள் தினசரி அடிப்படையில் விசாரிக்கப்பட்டு முடிவுகளை நோக்கிச் செல்லும்.” – என்றுள்ளது.






# பாவனையற்று இருந்த நெற்களஞ்சியசாலையை இயங்கவைக்க இராணுவத்தின் துரித செயற்பாடு

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பில் பல வருடமாக இயங்காதிருந்த நெல் களஞ்சியசாலையை இயங்க வைக்கும் நோக்கில் நேற்று இராணுவத்தினால் துப்பரவு பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு – திம்பிலி பகுதியில் அமைந்திருந்த நெல் களஞ்சியசாலையானது கொரோனா காலப்பகுதிக்கு பின்னர் நெல் கொள்வனவு செய்யப்படாமையால் பல வருடங்களாக பாவனையற்று காணப்பட்டிருந்தது.

இதனால். பல சமூக சீர்கேடுகள், சட்ட விரோத செயற்பாடுகளும் இந்த இடத்தில் இடம்பெறுவதனால், இந்த களஞ்சியசாலையில் இராணுவத்தின் ஏற்பாட்டில் நெல் கொள்வனவை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கில் நேற்று துப்பரவு செய்யப்பட்டிருந்தது.

புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியிலுள்ள 593 படைப்பிரிவின் 59 பிரிவிலுள்ள இராணுவத்தினரால் இந்த துப்பரவு பணி இடம்பெற்று கோம்பாவில் கமக்கார அமைப்பின் செயலாளர் ஏ. பிரதீபராசாவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.








## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் காரியங்கள் நடக்கின்றன.

அதிகாரப் பகிர்வுக்கான திட்டமாக மாகாண சபை முறையை கொழும்போடு சேர்ந்து புதுடில்லி தமிழர் தலையில் கட்டி அடித்த போதே, மாகாண சபை முறைமையைக் கொழும்பு நினைத்தால் சீரிழக்க வைக்க முடியும், அத்தகைய உறுதிப்பாடற்ற நோஞ்சான் திட்டம் இது என்ற யதார்த்த நிலைமையை அப்போதே தமிழர் தரப்பு புதுடில்லிக்கு வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி இருந்தது. இந்தத் திட்டத்தை விடுதலைப் புலிகள் அடியோடு எதிர்த்தமைக்கான பிரதான காரணம் அதுதான். அது இப்போது நடைமுறையில் பல்லாண்டுகளாக நிரூபணமாகி, விடுதலைப் புலிகளின் தீர்க்க தரிசனத்தை நிரூபித்து நிற்கின்றது.

அப்படி இந்தியாவும் சேர்ந்து கொண்டு வந்து தமிழர் தலையில் திணித்த மாகாண சபை முறைமையை வெற்றிடமாக வைத்துக் கொண்டு, மாகாண சபை மூலமான மக்கள் பிரதிநிதித்துவமும் மாநகர சபை மூலமான மக்கள் பிரதிநிதித்துவமும் இல்லாத வேளையில், இப்படி மாநகர சபைக்குரிய பிரதான கட்டமைப்பு கொழும்பினால் சீரழிக்கப் படுகின்றது. அதற்கு வேறு வழியின்றி இந்தியாவும் இழுபட்டுத் துணை போகும் அவல நிலைமை.

இந்த விடயத்தை ஒட்டி தமிழர் தரப்பில் கடும் கண்டனம் எழுந்திருக்கிறது. ஆயினும் இன்னும் பிரதான தமிழ்க் கட்சியான தமிழரசு தரப்பில் இருந்து தெளிவான பிரதிபலிப்பு வரவில்லை. அதற்குக் காரணம் உண்டு. மிக முக்கியமான இந்த விடயத்தில் கொள்கை கோட்பாடுகளோடு கருத்துக்களைத் தீர்மானமாக முன் வைக்க வேண்டி இருப்பதால் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இது பற்றிய ஆராய்வதற்காக அவசரமாகக் கூடுகின்றது என்று தெரிகிறது. இன்று அல்லது நாளை இக்கூட்டம் நடைபெறக் கூடும்.

வழமையாக இத்தகைய விடயங்களில் விழுந்தடித்துக் கொண்டு ஆளாளுக்கு அறிக்கை – அறிவிப்பு – கண்டனம் – வெளியிடும் தமிழரசுக் கட்சி இப்போது ஒழுங்கு முறையாக செயல்பட முயல்வதாகத் தோன்றுகின்றது. அரசியல் குழுவைக் கூட்டி ஒரு நிலைப்பாடு எடுத்து, கட்சியின் ஒட்டுமொத்தக் கருத்தாக ஒரு முடிவை வெளிப்படையாக அறிவிக்கத் தமிழரசுக் கட்சி தயாராகின்றது. தலைமை மாற்றத்தோடு கட்சி கட்டுப்பாடாக இயங்கக்கூடியதாக மாறுகின்றது என்பதற்கான முதல் சமிக்கையாக இதனைப் பார்க்க முடியும்.

-----------------------------

## நாட்டை அழித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களின் மொட்டுக் கட்சியை மக்கள் அடியோடு

சிதைத்துவிட்டார்கள். அவர்களின் குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இனிமேல் மீண்டெழ முடியாது.

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்கு ஆசைப்பட்ட நாமல் ராஜபக்ஷ இறுதியில் தேசியப்பட்டியல் ஊடாகவே நாடாளுமன்றம் வந்தார். அவர் இன்று வெட்கம் இல்லாமல் வீரவசனம் பேசுகின்றார்.

சீனாவுக்குச் சென்று வந்த ஜனாதிபதி அநுரகுமாரவை விமர்சிப்பதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு எந்தத் தகுதியும் கிடையாது.

தனது தந்தை மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொலைகளை, ஊழல், மோசடிகளைச் செய்த நாமல் ராஜபக்ஷ இன்று நல்ல மனிதர் போல் வேடம் போட முயல்கின்றார். என்ன வேடம் போட்டாலும் ராஜபக்ஷ குடும்பத்தினரால் இனிமேல் மீண்டெழ முடியாது." – என்றார்.

-----------------------------

## 3 சந்தேக நபர்களும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொடர்புடைய இருவர் மற்றும் அடம்பனில் இருவரைச் சுட்டுக்கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் என மூன்று சந்தேகநபர்களுக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிவான் முன்னிலையில் வழங்க முன்வந்துள்ளனர்.

அதனால் சந்தேகநபர்கள் மூவரையும் இன்று செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.20 மணியளவில் மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாகவுள்ள கோட்டை வீதியில் வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

2022ஆம் ஆண்டு உயிலங்குளம் – நொச்சிக்குளம் பகுதியில் இரு தரப்பினருக்கு இடையிலான மோதலில் சகோதரர்கள் இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். அதே குடும்பத்தை சேர்ந்த இருவர் உட்பட பலர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மன்னார் நீதிவான் நீதிமன்ற சுருக்கமுறையற்ற விசாரணைக்கு முன்னிலையாக நீதிமன்றுக்கு வருகை தந்தபோதே அவர்களை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பித்தனர்.

சம்பவத்தில் நொச்சிக்குளத்தை சேர்ந்த இருவர் உயிரழந்தனர். பெண் உட்பட இருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. பேசாலையில் வைத்து இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய நபர் உட்பட இருவர் தென்னிலங்கையில் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் கடந்த 2023 ஆம் ஆண்டு அடம்பனில் வைத்து இருவரைச் சுட்டுக்கொன்ற சம்பவத்துடன் தொடர்புடையவர். அந்தக் கொலையும் நீதிமன்றுக்குமுன்பானகொலையும்சகோதரர்களின் கொலைக்குப் பழிதீர்க்கும் சம்பவங்கள் எனக் கைது செய்யப்பட்டவர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் மன்னார் நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் மாலைமுற்படுத்தப்பட்டனர். பொலிஸ்காவலில் வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கப் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர். அதனை ஆராய்ந்த நீதிவான், நேற்று வரை மூவரையும் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதியளித்து கட்டளை வழங்கினார்.

இந்த நிலையில் மூவரும் நேற்று மாலை மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் நீதிவான் முன்னிலையில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வழங்க மன்றிடம் வேண்டுதல் வைத்தனர்.

அதனால் பொலிஸ் தடுப்புக் கட்டளையை நீடிக்காது சந்தேகநபர்கள் மூவரையும் இன்று வரை விளக்கமறியலில் முன்வைக்க உத்தரவிட்ட நீதிவான், இன்று குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவதற்கு அனுமதியளித்தார்.

-----------------------------

## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த தேர்தல்களில் ராஜபக்ஷக்கள் வரலாறு காணாத வகையில் படுதோல்வியடைந்துள்ளனர். அவர்களை மக்கள் அடியோடு நிராகரித்து விட்டார்கள். ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடி ஆட்சியே அவர்களின் படுதோல்விக்குப் பிரதான காரணம்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ஷக்கள் தேர்தல்களில் படுதோல்வியடைந்தாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. அவர்கள் இழைத்த குற்றங்களுக்கு அவர்கள் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஊழல், மோசடிகளுக்கு இடமேயில்லை. ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே எமது அரசின் பிரதான நோக்கம்." – என்றார்.

-----------------------------

## யாழில் 108 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இருவர் மற்றும் பூநகரி, மன்னாரைச் சேர்ந்த தலா ஒருவர் என நால்வர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேகநபர்களைக் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவுடன் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

-----------------------------

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும், ஆளும் தரப்பினரும் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பிலும் அவர் கடும் எதிர்ப்பு வெளியிட்டார்.

"தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள், மஹிந்த ராஜபக்ஷவை நேசிப்பவர்கள். எனவே, போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்தவைப் பாதுகாப்பதற்கு அனைவரும் அணிதிரள வேண்டும்." – என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.





# உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான புதிய விற்பனைக்கூடம் யாழில் திறப்பு

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் ஆலோசனையுடன், யாழ்ப்பாணம் முயற்சியாளர் சங்கத்தால் நடத்தப்படும் “பஞ்சவர்ணம்” உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான புதிய விற்பனைக்கூடம் யாழ். நகரப் பகுதியில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துக்கு எதிரில் நேற்று திங்கட்கிழமை மதியம் திறந்து வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் விற்பனைக்கூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில்,

“உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பிரச்சினை இருக்கின்றது. உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களைப் பொதுவான இடத்தில் காட்சிப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் வாய்ப்புக்களைக் கோரியிருந்தார்கள். தற்போது திறக்கப்பட்டுள்ள இந்த இடத்தில்தான் நான் மாவட்ட செயலராக இருந்தபோதும் விற்பனைக்கூடத்தை திறப்பதற்கு திட்டமிட்டிருந்தாலும் அது அப்போது சாத்தியப்பட்டிருக்கவில்லை. இப்போது சாத்தியமாகியுள்ளது. தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தாலும் நிரந்தரமான கட்டடத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் அமைக்க முடியும் என நம்புகின்றேன்.

எமது சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் பொருட்களை மக்கள் கொள்வனவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டும். வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான விற்பனை நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்த முயற்சியில் ஈடுபடும் அனைத்து முயற்சியாளர்களையும் வாழ்த்துகின்றேன். இதைச் சிறப்பாக இயக்குவதன் மூலமே உங்களுக்கு தொடர்ச்சியாக உதவிகளை வழங்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கும் ஏற்படும். சிறப்பாக இயங்க வாழ்த்துகின்றேன்.” – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்றுறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலர் பொ.வாகீசன், வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி செ.வனஜா, யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் ஆகியோரும், துறைசார் திணைக்கள அதிகாரிகளும் பங்கேற்றனர்.

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் விற்பனைக் கூடம் காலை 9 மணியிலிருந்து பி.ப. 5 மணி வரையில் திறந்திருக்கும். உள்ளூார் உற்பத்தியாளர்களின் பனை சார் உற்பத்திகள், உள்ளூார் சிற்றுண்டிகள், ஆயுள்வேத மூலிகைப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், மிளகாய் தூள், சரக்குத் தூள் உள்ளிட்ட பல வகையான பொருட்கள் விற்பனைக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.










# நெல்லுக்கான குறைந்தபட்ச விலையினை நிர்ணயிக்கும் பொறுப்பு 5 நிறுவனங்களுக்கு

நெல்லுக்கான குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு 5 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனம், விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம், உணவுத் திணைக்களம் உள்ளிட்ட 5 நிறுவனங்களுக்கு இந்தப் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளதாக விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

மேற்படி நிறுவனங்களின் ஊடாக உற்பத்தி செலவினங்களை கணக்கீடு செய்து நெல்லுக்கான குறைந்தபட்ச விலையை அறிவிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

உற்பத்தி செலவுகளைக் கணக்கிடும் போது உர நிவாரணத்தை கருத்திற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

விரைவில் நெல்லுக்கான குறைந்தபட்ச விலை அறிவிக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளுக்கு நெல்லைக் கொண்டு சென்று விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு ஒரு கிலோகிராமுக்கு 2 ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்க அரசாங்கம் அண்மையில் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்லைன் ரயில் பயணச்சீட்டு மோசடி தொடர்பில் விசாரணை




ஒன்லைன் ரயில் பயணச்சீட்டு மோசடி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினிக் குற்ற விசாரணைப் பிரிவு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களம் தொலைபேசி நிறுவனமொன்றுடன் இணைந்து விநியோகிக்கும் ஒன்லைன் ஆசன ஒதுக்கீட்டு பயணச்சீட்டை உடனடியாகப் பெற்று அவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்யும் மோசடி இடம்பெறுகின்றமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான துரித விசாரணை அறிக்கை விரைவில் முன்வைக்கப்படுமென குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள், கொழும்பு பிரதம நீதவானிடம் உறுதியளித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முறையான கல்வித் திட்டம் தேவை

இளைஞர்கள் - குறிப்பாக பதின்ம வயதினர் - தங்களுக்குத் தாங்களே பாதிப்புகள் மற்றும் தீங்குகளை ஏற்படுத்துதல், வாழ்வைத் தாங்களே முடித்துக் கொள்ளுதல் என்பன போன்ற செய்திகள் அடிக்கடி வெளியாகிக் கவனத்தை ஈர்க்கும் பின்புலத்தில், இலங்கையின் கலாசாரப் போக்கில் மனநலப் பிரச்சினைகள், மனப்புறழ்வுகள், சிக்கல்கள் போன்றவை அதிகம் கவனிக்கப்படாத விடயமாகப் புறமொதுக்கப்பட்டு வருகின்றன எனச் சுட்டப்படுகிறது.

மனநல பிரச்சினைகள், குடும்ப வன்முறைகள், பாரிய துன்புறுத்தல்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை - துஷ்பிரயோகம் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டு உதவி தேடுபவர்களுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட 'ஹொட் லைன்' இணைப்புக்கு கடந்த ஆண்டு மொத்தம் 78 ஆயிரம் தொலைபேசி அழைப்புகள் வந்தன என்று தேசிய மனநல நிறுவனம் சமீபத்தில் தெரிவித்திருக்கின்றது.

இது பலரும் தங்களின் மனநலப் பிரச்சினைகள் குறித்துத் தங்களை அடையாளப்படுத்தி, வெளிப்படுத்த முடியாத நிலையிலும் ஏதோ ஒரு வகையில் அது குறித்து கலந்துரையாட - விவாதிக்க - ஆலோசனை கலக்க - வழிகாட்டல் பெற - ஆவலாய் இருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தி நிற்பதாக தேசிய மனநல நிறுவனம் குறிப்பிடுகின்றது.

கையடக்கத் தொலைபேசிச் செயற்பாடுகள் மூலம் இளம் வயதினர் தங்கள் பிரச்சினைகள் குறித்து உளவள ஆலோசனை பெற - அது பற்றி தொடர்பு கொண்டு கலந்தாய்வு செய்ய - தயாராக இருக்கின்றனர் என்பதை இந்தப் புள்ளிவிவர தகவல்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகும் பிரச்சினைகளில் இருந்து தங்களை விடுவிப்பதற்காக உதவும் படி கோரி சுமார் ஐயாயிரம் இளைஞர்கள் அந்த நிறுவனத்துடன்தங்களைப்பதிவுசெய்திருக்கின்றனர் என்ற தகவலும் வெளியாகி உள்ளது.

வீட்டில் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகள், அதனால் உருவாகும் குடும்பப் பிணக்குகள், அவற்றின் தொடர்விளைவாக நேரும் கல்விப் பிரச்சினைகள் போன்றவையே இளம் சந்ததியினர் மத்தியில் உளவியல் சிக்கல்கள் உருவாவதற்கான அடிப்படையாகப் பெரும்பாலும் இருக்கின்றன என்ற தகவலும் கவனத்திற்குரியதாகின்றது.

உலக சுகாதார அமைப்பின் சமீபத்திய ஆய்வுகள், கொவிட் தொற்றுப் பரம்பலை அடுத்து உலகளாவிய ரீதியில் அந்தத் தொற்றுக்குப் பிந்திய சூழலில் இளைஞர்களிடையே உளவியல் பிரச்சினைகள் நாற்பது வீதம் அதிகரித்துள்ளன என்பதை வெளிப்படுத்துகின்றன. இந்த விடயத்தில் இலங்கையின் இளம் சமூகமும் விதிவிலக்கல்ல.

சமூக ஊடகத் தளங்களின் அதிகப்படியான பயன்பாட்டினால் தூண்டப்பட்ட சமூக கவலைகளின் புதிய பரிமாணமாக இந்தப் போக்கு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இது உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் கூடப் பிரதிபலிக்கின்றது.

இலங்கையின் கல்வி முறையானது பாடசாலை வயதுக் குழந்தைகளின் உணர்ச்சி மற்றும் உளவியல் அம்சங்களைக் கையாளத் தவறிவிட்டதாக கல்வியாளர்கள் மற்றும் உளவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதே வேளை தற்போதுள்ள காலாவதியான பரீட்சை சார்ந்த அணுகுமுறை பெற்றோரின் எதிர்பார்ப்புகளையும், கல்வி அழுத்தங்களையும் அதிகரித்து, குழந்தைகளின் மன ஆரோக்கியம் மற்றும் ஆக்கத்திறனைக் கணிசமாக பாதிக்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

மனச்சோர்வு மற்றும் அதிர்ச்சிக்கு பங்களிக்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ள கொடுமைப்படுத்துதல் என்ற நீண்டகாலப் பிரச்சினையும் கவனத்தை ஈர்க்க வேண்டும். இலங்கையில், கொடுமைப்படுத்துதலின் ஒரு வடிவமான ராகிங், அதற்கு எதிரான சட்ட மற்றும் பிற தலையீடுகள் இருந்தபோதிலும் தொடர்கிறது. இந்தச் சூழலில், இளைஞர்களிடையே உள்ள மனநலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமானால், இலங்கையின் கல்வி முறையில் ராகிங் உள்ளிட்ட கேவலமான கொடுமைப்படுத்தும் கலாசாரம் முடிவுக்கு வர வேண்டும்.

இவற்றின் பின்புலத்தில், இளைஞர்களின் - பதின்ம வயதினரின் - கல்வித் தேடலை நெறிப்படுத்தி, வலுப்படுத்த முறையான திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். இது காலத்தின் கட்டாய மாகும்.

# இராணுவத்தின் நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவோருக்குத் தக்க தண்டனை!

## இராணுவத் தளபதி எச்சரிக்கை



இலங்கை இராணுவத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் படை அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இராணுவத்தின் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவோருக்குத் தராதரம் பாராது இராணுவச் சட்டங்களின் பிரகாரம் தண்டனை விதிக்கப்படும். இவ்வாறு அபகீர்த்தி ஏற்படுத்துவோர் உடன் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

அனைத்து துறைகளிலும் ஊழல், மோசடிகளை மேற்கொள்வோர் இருக்கக் கூடும். அவ்வாறானவர்கள் இராணுவ சேவையில் கடமையாற்றி வந்தால், அவர்களுக்கு எதிராகப் பொலிஸார் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்." – என்றார்.

# ராஜபக்ஷக்களை அரசியலில் இருந்து விரட்டவே முடியாது!

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. சூளுரை




ராஜபக்ஷக்களை அரசியலில் இருந்து ஒருபோதும் வீழ்த்த முடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ராஜபக்ஷக்கள் கடந்த இரண்டு தேசிய தேர்தல்களிலும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றார்கள் என்பது மட்டுமே உண்மை. ஆனால், அவர்களை அரசியலில் இருந்து ஒருபோதும் வீழ்த்த முடியாது. இதை அநுரவின் கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில், அநுரவின் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களில் சிலர் அடிப்படை அரசியல் அறிவு தெரியாமல் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்து வருகின்றார்கள். அவர்கள் ராஜபக்ஷக்களின் அரசியல் வரலாற்றை ஒரு தடவை மீட்டுப் பார்க்க வேண்டும். சிறுபிள்ளைத்தனமாக அவர்கள் கருத்து வெளியிடுவதால் அவர்களின் கட்சிக்கே அவமானம்." – என்றார்.




# 'கிளீன் சிறிலங்கா' கோரும் அநுர அரசு படை ஆக்கிரமிப்பைக் கிளீன் செய்யுமா?

**- ந.லோகதயாளன் -**

இலங்கையில் "கிளீன் சிறிலங்கா திட்டம்" பேச்சளவில் தற்போது பேச்சளவில் இருந்தாலும் செயலளவில் செய்ய வேண்டிய கிளீன் பல விடயங்கள் உள்ளது.

குறிப்பாக பொருளாதார மேம்பாடு கருதி மக்களின் வாழ்விடங்கள் மற்றும் விவசாய இடங்களில் இருந்து படையினரை அகற்றில் ஜனாதிபதி கிளீன் செய்வாரா என்ற கேள்வி முன்வைக்கப்படுகின்றது.

வடக்கில் பல பண்ணைகள் இன்றுவரை படையினரின் ஆக்கிரமிப்பிலேயே உள்ளன.

அதிலே கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி விவசாய பண்ணையில் 394 ஏக்கர் நிலப்பரப்பு, ஜெயபுரத்தில் 120 ஏக்கர் பண்ணை, மலையாளபுரத்தில் 798 ஏக்கர் பொதுப் பண்ணை, சாந்தபுரத்தில் 680 ஏக்கர் பண்ணை, முழங்காவில் 1,800 ஏக்கர் மர முந்திரிகை தோட்டத்தின் பெரும்பகுதி என்பன வற்றுடன் முக்கொம்பன் பகுதியில் உள்ள 100 ஏக்கர் தென்னம் தோட்டம் என்பனவற்றை இன்றும் இராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில் 1,200 ஏக்கர் விவசாய பண்ணை, முத்தையன்கட்டு பகுதியில் பல நூறு ஏக்கர் காடுகள் முழுமையாக அழிக்கப்பட்டு இராணுவ பண்ணை அமைக்கப்பட்டுள்ளமையோடு துணுக்காய் தேறாங்கண்டல் பண்ணை, கொக்குத்தொடுவாயில் முந்திரிகை செய்கைக்கு என தலா 25 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டிருந்த பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளையும் இராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது.

மன்னார் மாவட்டத்திலே வெள்ளாங்குளத்தின் 500 ஏக்கர் விவசாய பண்ணை ஆக்கிமிக்கப்பட்டுள்ளது. வவுனியா செட்டிகுளம் பகுதியில் தனியார் நிலத்தில் இராணுவத்தின் பெரும் பண்ணை உள்ளது.

வவுனியா தமிழர் நிலம் பகுதியிலும் 25 ஏக்கர் பரப்பளவில் இராணுவப் பண்ணை இருக்கின்றது

இவற்றில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மேற்குறித்த விவசாய பண்ணைகள் ஊடக





மட்டும் ஆண்டு தோறும் 15 மில்லியன் ரூபா வருமானத்தை இலங்கை இராணுவத்தினர் உழைத்து வருகின்றார்கள்

அதே போன்று கிளிநொச்சி மாவட்ட பண்ணைகள் ஊடக 13 மில்லியன் ரூபா வருமானத்தை இராணுவத்தினர் சம்பாதித்து வருகின்றார்கள்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வலி.வடக்கில் படையினர் வசம் உள்ள 3,112 ஏக்கர் தனியாருக்குச் சொந்தமான நிலப்பரப்பில் நூற்றிற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் இராணுவம் தோட்டம் செய்து வருமானம் ஈட்டுகின்றது.

தொடர்ச்சி▼

# 'கிளீன் சிறிலங்கா' கோரும் அநுர அரசு படை ஆக்கிரமிப்பைக் கிளீன் செய்யுமா?




தொடர்ச்சி▲

இது போதாதென்று பாதுகாப்பு சார் காரணங்களை நுண்ணிய வடிவில் வன்னியின் வாழ்வாதாரப் பிரச்சனைகளோடு பிணைத்து விட்டிருக்கிறார்கள்

குறிப்பாக பொருளாதாரம் சார்ந்து மாற்றுத் தெரிவில்லாமல், இராணுவத்தின் பண்ணைகளில் கூலி வேலை செய்தால்தான் பிழைக்கலாம் என்ற சூழலை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

இந்த இராணுவ பண்ணை களை மூடி, விவசாய அமைப்புக் களிடம் அவற்றை வழங்கி அபி விருத்தி செய்தால் வன்னி மட்டு மின்றிவடக்குமாகாணமேஇலங்கை தீவின் விவசாய பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திற்கு கணிசமாக பங்களிப்புச் செய்ய முடியும். இவை இராணுவ நீக்கப் பிரச்சனை என்பதால் ஆட்சியா ளர்கள் செய்ய மறுக்கின்றார்கள்.

இவை படையினர் மேற்கொள் ளும் விவசாய நிலங்கள். இவை தவிர்ந்த படை நிலைகளும் உண்டு. இதில் முல்லைத்தீவு வட்டுவாகலில் 680 ஏக்கர் நிலப்பரப்பில் இராணுவ முகாமும், கேப்பாபுலவில் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் விமானப்படை முகாமும், கரிப்பட்டமுறிப்பில் 6,200 ஏக்கர் முகாமும் இருக் கின்றன்.

மன்னார் சன்னர் பகுதியில் 100 ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமித்து இராணுவ முகாம் இருக்கும் அதே நேரம் முள்ளிக்குளத்தில் 600 ஏக்கர் நிலப்பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு இருக்கிறது.

வவுனியா புளியங்குளம் பகுதி யில் தனியார் காணிகளை அபக ரித்து சிறப்பு அதிரடிப் படை முகாம் உள்ளது.

வவுனியா, மருதோடை சந்தி யில் பல ஏக்கர் தனியார் நிலத் தில் இராணுவ முகாம் அமைக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் பகுதியில் 15 ஏக்கர் தனியார் நிலத்தில் இராணுவ முகாம் நிறு வப்பட்டுள்ளது .

ஒட்டுசுட்டான் சந்தியில் 50 ஏக்கர் (சுடலை உட்பட) அபகரிக்கப் பட்டு இராணுவ முகாம் அமைக் கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயல கத்தின் 2019 ஆம் ஆண்டு புள்ளிவிவ்ரங்களின்படி, முல் லைத்தீவு மாவட்டத்தில் 679 ஏக் கர் தனியார் காணிகளும் 3,178 ஏக்கர் அரச காணிகளும் படையி னர் வசம் இருந்தன.

ஆனால் மேலதிகமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி களை இராணுவம் தனது முகாம் களுக்காகவும் குடியிருப்புக்க ளுக்காகவும் கைவசப்படுத்தி வைத்திருக்கிறது.

திருமுருகண்டி கோவிலின் முன்னிருக்கும் ஏ9 வீதியின் அடுத்த பக்கத்தில் 1,702 ஏக்கர் காணி இராணுவத்தினரிடம் இருந்து வருகின்றது. இந்த இராணுவ முகாம் பகுதிக்குள் மழை காலத் தில் நீர் போக்கூடாது என்பதற்காக அருகில் உள்ள குளத்தின் வான் கட்டு முழுமையாக உடைத்து விடப்பட்டுள்ளது.

இந்த ஆக்கிரமிப்புக்குள் வடக்கின் பொருளாதாரம் முடங்கி கிடக்கின்றது. வடக்கு மாகாண பொருளாதார குறித்தும் அபிவிருத்தி குறித்தும் பேசும் எவரும் இந்த விடயங்களைப் பேசுவதில்லை எனவே அநுர அரசு பொருளாதார நிலைகளில் இருந்து படையினரை அகற்றிக் "கிளீன செய்ய வேண்டும்.

விவசாயிகளின் நெருக்கடி இது எனில் மறுபக்கம் இப்பகுதி களில் படையினர் மேற்கொள்ளாத தொழிலே இல்லை என்று கூறலாம். விடுதிகள், உணவகங்கள், சிற்றூ ண்டிச் சாலைகள் மட்டுமன்றி முடி வெட்டும் சலூன் கடைகளைக் கூட விட்டுவைக்கவில்லை. சலூ ன் கடைகளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் படையினர் இன்றும் தொழிலாக நடாத்துகின்றனர்.

இவை கிளீன் செய்யப்பட்டாலே தமிழர்களின் மனத்தில் தென் னிலங்கை பற்றிய கருத்து கிளீன் செய்யப்படும்.

■





# சம்பூர் பெரியகுளத்தை நேரில் சென்று பார்வையிட்டார் ஜப்பானியத் தூதுவர்

(எஸ்.கீதபொன்கலன்)

சம்பூர் பெரியகுளத்தை நேற்று ஜப்பானிய தூதுவர் இசமட்டா அக்கியோ நேரில் சென்று பார்வையிட்டார்.

2022 ஆம் ஆண்டு இக்குளத்தின் புனரமைப்பு வேலைகளுக்கென ஜப்பானிய அரசாங்கம் 9.4 மில்லியன் ரூபா நிதி உதவியை இலங்கைக்கு வழங்கியிருந்தது. இந்தக் குளத்தின் தற்போதைய நிலையை ஜப்பானிய தூதுவரும் ஏனைய தூதரக அதிகாரிகளும் நேரில் பார்வையிட்டனர்.







# கண்ணிவெடி அகற்றும் மூன்று பெண் பணியாளர்கள் கொக்குத்தொடுவாயில் யானை துரத்தியதில் காயம்

(பா.சதீசன்)

கொக்குத்தொடுவாய் தெற்குப் பகுதியில் யானை துரத்தியதில் கண்ணிவெடி அகற்றும் மூன்று பெண் பணியாளர்கள் காயமடைந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்த் தெற்கு கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட வேம்படி சந்தியில் இருந்து வெலிஓயா செல்லும் பாதை பகுதியில் காட்டுப்பகுதிக்குள் கண்ணிவெடிப் பிரிவை சேர்ந்த 10 பேர் கொண்ட குழு வேலை செய்து கொண்டு இருந்துள்ளது. அந்தப் பகுதியில் திடீரென யானை ஒன்று வந்து அவர்களைத் துரத்தியுள்ளது.

யானைக் கண்டவுடன் பயத்தில் பணியாளர்கள் ஓடியுள்ளனர். அதன் போது 3 பெண் பணியாளர்கள் காயமடைந்துள்ளார்கள்.

காயமடைந்த மூவரும் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.



# வடமத்திய மாகாண பாடசாலைகளில் இன்று கல்வி நடவடிக்கை இடம்பெறும்

வடமத்திய மாகாணத்தில் மூடப்பட்ட அனைத்துப் பாடசாலைகளையும் இன்று மீண்டும் திறக்கப்படுகின்றன.

சீரற்ற காலநிலை காரணமாக வட மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் நேற்று மூடப்பட்டன.

மாகாண கல்விச் செயலாளரின் பணிப்புரைக்கமைய இன்று மீண்டும் வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் திறக்கப்படுகின்றன.

இதேவேளைன் நேற்று மூடப் பட்டிருந்த கிழக்கு மாகாண பாட சாலைகளும் இன்று திறக்கப்பட வுள்ளன.



# கொழும்பு பங்குச் சந்தையின் விலைச் சுட்டெண் அதிகரிப்பு


கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட் டெண் நேற்று குறிப்பிடத்தக்க அதிகரிப் பைப் பதிவு செய்துள்ளது.

அதனடிப்படையில், அனைத் துப் பங்கு விலைச் சுட்டெண் 115.84 புள்ளிகளால் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அந்தவகையில், கொழும்பு பங் குச் சந்தையின் அனைத்துப் பங்கு களின் மொத்த விலைச் சுட்டெண் இன்று 16,375.15 புள்ளிகளாகப் பதி வாகியுள்ளது.

அத்துடன், எஸ் அன்ட் பி ஶ்ரீலங்கா 20 பங்கு விலைச் சுட்டெண் 30.37 புள்ளிகளால் அதிகரித்து 4,962.3 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந் தையின் மொத்தப் புரள்வானது நேற்று 5.5 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது.



# தொடர் மழையால் 16,930 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக 5,738 குடும்பங்களைச் சேர்ந்த 16,930 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்திலே அதிக மானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, மேற்படி மாகாணத்தில் 14,806 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் 1,496 பேரும், வடமத்திய மாகாணத்தில் 356 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



# நீர் நிலைகளின் நீர்மட்டம் உயர்வு

மழையுடனான காலநிலையால் நீர்நிலைகளின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளதாக நீர்பாசனத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மல்வத்து ஓயாவை அண்டிய தந்திரிமலை பகுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

தெதுறு ஓயாவை அண்மித்த மொரகஸ்வெவ பகுதியில் வெள்ளம் ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மல்வத்து கங்கையை அண்மித்த மனம்பிடிய மற்றும் யான் ஓயாவை அண்மித்த ஹொரவ்பொத்தான பகுதிகளிலும் சிறிய அளவிலான வெள்ளம் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அஸ்வெசும 2 ஆம் கட்டத்துக்கான கணக்கெடுப்பு இன்று ஆரம்பம்

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு விண்ணப்பித்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் கணக்கெடுப்பு இன்று ஆரம்பமாகும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இரண்டாம் கட்டத்திற்கு சுமார் 8 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் முதலாம் கட்டத்திற்கு 34 லட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், அதில் 18 லட்சம் பேர் மட்டுமே அதற்கு தகுதி பெற்றன என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.



# நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

நாடாளுமன்றம் இன்று முதல் 24 ஆம் திகதி வரை கூடுகிறது.

சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கடந்த 10 ஆம் திகதி கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இன்று காலை 9.30 முதல் காலை 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, காலை10.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது

முற்பகல் 11.00 மணி முதல் முற்பகல் 11.30 வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், முற்பகல் 11.30 முதல் மாலை 5.30 வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் 'க்ளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெற்று, நாளை இரண்டாவது நாள் விவாதத்துக்காக ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளை காலை 9.30 முதல் காலை 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

காலை 10.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11.00 மணி முதல் முற்பகல் 11.30 வரை நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, முற்பகல் 11.30 முதல் மாலை 5.30 வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் 'க்ளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இரண்டாவது நாளாகவும் இடம்பெறும்.

ஜனவரி 23 ஆம் திகதி வியாழக்கிழமை, காலை 9.30 முதல் காலை 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, காலை 10.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது

முற்பகல் 11.00 மணி முதல் முற்பகல் 11.30 வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 3.30 வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் 2413ஃ37 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் 2399ஃ16 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் 2384ஃ35 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 2377/39 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதனையடுத்து, பிற்பகல் 3.30 முதல் மாலை 5.30 வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கும் இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக முழு நாளும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர். சம்பந்தன், ருக்மன் சேனாநாயக்க, ரொஜினோல்ட் பெரேரா, சிறினால் த மெல் மற்றும் மொஹமட் இல்யாஸ் ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக அன்றைய தினம் காலை 9.30 முதல் மாலை 5.30 வரை நேரம் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.



# பரந்தூர் விமான நிலையத்தை எதிர்க்கும் விவசாயிகளுக்கு நாமும் துணை நிற்போம்

## தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தெரிவிப்பு

பரந்தூர் விமான நிலையத்தை எதிர்த்து போராடும் விவசாயிகளுக்கு நானும், எனது கட்சியினரும் துணை நிற்போம் என்று தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

சென்னையின் 2 ஆவது விமான நிலையத்தை காஞ்சிபுரம் அருகே பரந்தூரில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக பரந்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள 13 கிராமங்களிலிருந்து 5,100 ஏக்கர் விவசாய நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. இதில் ஏகனாபுரம் உள்ளிட்ட கிராமங்கள் முற்றிலும் கையகப்படுத்தப்பட உள்ளதால் அந்த கிராமத்தை மையமாக வைத்து 910 ஆவது நாளாக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

போராடும் பொதுமக்களுக்கு ஆதரவாக விக்கிரவாண்டியில் நடைபெற்ற மாநாட்டில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தீர்மானம் நிறைவேற்றியிருந்தார். இதனைத் தொடர்ந்து போராடும் மக்களை சந்திக்கவும் முடிவு செய்தார். அதற்கான பொலிஸ் அனுமதி பெறப்பட்டு, நேற்று பரந்தூர் விமான நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் 13 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகளை த.வெ.க. தலைவர் விஜய் பொடவூரில் உள்ள தனியார் மண்டபத்தில் சந்தித்துப் பேசினார். இதன்போது விஜய் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில்,

“கிட்டத்தட்ட ஒரு 910 நாட்களுக்கு மேல், உங்களுடைய மண்ணுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தப் போராட்டம் குறித்து ராகுல் என்று சிறுவன் பேசியதை நான் கேட்டேன். அந்த குழந்தையின் பேச்சு என் மனதை ஏதோ செய்துவிட்டது. உடனடியாக உங்கள் அனைவரையும் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. உங்கள் அனைவருடனும் பேசியே ஆக வேண்டும் என்று தோன்றியது. உங்கள் அனைவருடனும் நான் தொடர்ந்து நிற்பேன் என்று சொல்லணும் என்று தோன்றியது.

என்னை உங்கள் வீட்டில் இருக்கிற ஒரு மகனாக, என்னுடைய கள அரசியல், உங்களின் ஆசீர்வாதத்தோடு, இங்கிருந்துதான் தொடங்குகிறது. த.வெ.க. முதல் மாநில மாநாட்டில் நமது கட்சியின் கொள்கைகளை எல்லாம் எடுத்துக் கூறினேன். அதில் ஒன்றுதான் இயற்கை வளப்பாதுகாப்பு. சூழலியல் மற்றும் காலநிலை நெடுக்கடியை எதிர்கொள்ளக்கூடிய, இயற்கைக்கு ஊறு விளைவிக்காத, பகுதிசார் மாநில வளர்ச்சி பரவலாக்கம், இதுதான் தவெக அறிவித்த அந்த கொள்கை. இதை இங்கு நான் சொல்வதற்கு காரணம், வாக்கு அரசியலுக்காக அல்ல.

இந்தப் பிரச்சினையில் நான் உங்களுடன் உறுதியாக நிற்பேன். நான் வளர்ச்சிக்கு எதிரானவன் எல்லாம் கிடையாது. விமான நிலையமே வரக்கூடாது என்றெல்லாம் நான் சொல்லவில்லை. இந்த இடத்தில் வரக்கூடாது என்றுதான் கூறுகிறேன். இதை நான் சொல்லவில்லை என்றால், நான் வளர்ச்சிக்கு எதிரானவன், என்றொரு கதையைக்கட்டி ஆரம்பித்துவிடுவார்கள். நமக்கு அதைப் பற்றியெல்லாம் கவலை இல்லை. எல்லாவற்றுக்கும் மேலே, இன்றைக்கு இந்த பூமியில் வாழும் எல்லா உயிரினங்களின் இருப்பையும், புவி வெப்பமயமாதல் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

சமீபத்தில், அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதை எதிர்த்து தமிழக அரசு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால், அதே நிலைப்பாட்டைத்தானே பரந்தூர் பிரச்சினையிலும் அரசு எடுத்திருக்க வேண்டும். எடுக்க வேண்டும். எப்படி அரிட்டாப்பட்டி மக்கள் நம்ம மக்களோ, அதுபோலத்தானே பரந்தூர் மக்களும் நம்ம மக்கள். அப்படித்தானே ஒரு அரசாங்கம் யோசிக்க வேண்டும். ஆனால் அப்படி செய்யவில்லையே? ஏன் செய்யவில்லை? , காரணம், இந்த விமான நிலையத்தையும் தாண்டி, இந்த திட்டத்தில் அரசுக்கு ஏதோ ஒரு லாபம் இருக்கிறது.அதை நம்ம மக்கள் தெளிவாக புரிந்துவைத்துள்ளனர்.

தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கும் போது 8 வழிச்சாலைத் திட்டத்தை எதிர்த்தீர்கள், காட்டுப்பள்ளி துறைமுகத் திட்டத்தை எதிர்த்தீர்கள். அதே நிலைப்பாட்டைத்தானே பரந்தூரிலும் எடுத்திருக்க வேண்டும். அதெப்படி, எதிர்க்கட்சியாக இருக்கும்போது விவசாயிகளுக்கு ஆதரவு, ஆளுங்கட்சியாக இருக்கும்போது விவசாயிகளுக்கு எதிர்ப்பா? எனக்கு புரியவில்லை. இனிமேலும், உங்களுடைய நாடகத்தை எல்லாம் பார்த்துக்கொண்டு மக்கள் சும்மா இருக்கமாட்டார்கள். நீ உங்களுடைய வசதிக்காக அவர்களுடன் நிற்பதும், அவர்களுடன் நிற்காமல் இருப்பதும், நாடகம் ஆடுவதும், நாடகம் ஆடாமல் இருப்பதும், நம்புற மாதிரி நாடகம் ஆடுவதில் நீங்கள்தான் கில்லாடிகள் ஆச்சே, அதையும்மீறி விவசாயிகள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி போராடினால் பிரச்சினை தான்.

எனவே, இனிமேல் உங்களுடைய நாடகத்தைப் பார்த்துக்கொண்டு மக்கள் சும்மா இருக்கமாட்டார்கள். பரந்தூரில் விமான நிலையம் அமைப்பதற்காக ஆய்வு செய்த இடத்தை மறுஆய்வு செய்ய வேண்டும் என்று மத்திய மாநில அரசுகளை நான் கேட்டுக் கொள்கிறேன். விவசாய நிலங்கள் இல்லாத, பாதிப்புகள் குறைவாக இருக்கும் இடமாகப் பார்த்து விமான நிலையத்தை கொண்டு வாருங்கள். வளர்ச்சிதான் மக்களின் முன்னேற்றம். ஆனால் வளர்ச்சி என்ற பெயரில் நடக்கும் அழிவு மக்களை ரொம்பவே பாதிக்கும். பரந்தூர் கிராம தேவதைகளான அம்மன்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள். உங்களுக்காகவும், உங்களுடைய கிராமத்துக்காகவும், இனி உங்கள் வீட்டுப் பிள்ளையான நானும், த.வெ.க. கவினரும், சட்டத்துக்குட்பட்டு எல்லா வழிகளிலும் உங்களுடன் உறுதியாக நிற்பேன்.” – என்றார்.



# கொல்கத்தா வைத்தியர் கொலை வழக்கு; குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

கடந்த ஆண்டு கொல்கத்தாவின் ஆர்.ஜி.கார் வைத்தியசாலையில் பயிற்சி வைத்தியரை துஷ்பிரயோகம் செய்து கொலை செய்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட சஞ்சய் ராய்க்கு ஆயுள் தண்டனையும், 50,000 இந்திய ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் அமைந்துள்ள உள்ளூர் நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதேநேரம், பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்திற்கு மாநில அரசு 17 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

எனினும், பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினர் இழப்பீடு தொகையை ஏற்க மறுத்துவிட்டனர்.

2024 ஒகஸ்ட் 9 அன்று அதிகாலையில் வைத்தியசாலையில் உள்ள கருத்தரங்கு கூடத்தில் முதுகலை மருத்துவ பயிற்சி பெற்ற பெண்ணின் உடல் கண்டெடுக்கப்பட்டது. அவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பின்னர் கொல்லப்பட்டார் என கூறப்படுகிறது.

இக்குற்றம் தொடர்பாக சஞ்சய் ராய் என்ற நபர் மறுநாள் கைது செய்யப்பட்டார்.

கொல்கத்தா பொலிஸார், உயிரிழந்தவரின் உடல் அருகே கண்டெடுக்கப்பட்ட புளூடூத் இயர்போன் மூலம் சஞ்சய் ராயை அடையாளம் கண்டனர்.

சஞ்சய் ராய் தனது கழுத்தில் புளூடூத் இயர்போன் கருவியுடன் கருத்தரங்கு மண்டபத்திற்குள் நுழைவது சி.சி.டி.வி. காட்சிகளில் காணப்பட்டது.

இந்த சம்பவம் நாடு தழுவிய அளவில் கண்டனத்துக்கும், ஆயிரக்கணக்கான மக்களின் எதிர்ப்புகளுக்கும் வழிவகுத்தது.



## போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு:

# இஸ்ரேல் அமைச்சரவையிலிருந்து 3 அமைச்சர்கள் பதவி விலகினர்






இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ள சூழலில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நெதன்யாகு அமைச்சரவையில் இருந்து 3 அமைச்சர்கள் அடுத்தடுத்து பதவி விலகியுள்ளார்கள்.

கடந்த 2023 ஆம் ஆண்டு இஸ்ரேல் நாட்டில் நுழைந்த ஹமாஸ் படை சரமாரியாகத் தாக்குதலை நடத்தியது.

அன்றிலிருந்து மத்திய கிழக்கில் தொடர் தாக்குதல்கள் ஆரம்பமானதுடன் இதுவே இந்த போரின் தொடக்கமாக அமைந்தது.

மேலும் அன்றிலிருந்து ஹமாஸ் அமைப்பு மீது இஸ்ரேல் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டது.

இவ்வாறான பின்னனியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இஸ்ரேல் நடத்திய அதிரடி தாக்குதலில் ஹமாஸ் தலைவர் சின்வார் கொல்லப்பட்டார்.

கட்டடம் ஒன்றில் பதுங்கி இருந்த சின்வாரை இஸ்ரேல் கொன்றது. இது மட்டுமின்றி ஹமாஸ் படையின் பல மேஜர் தலைவர்களையும் கூட இஸ்ரேல் குறிவைத்து கொன்றது.

ஹமாஸ் தலைவர் உட்படப் பலரும் கொல்லப்பட்டதால் போர் நிறுத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற குரல்கள் சர்வதேச ரீதியில் அதிம் எழுந்தன.

இதற்காக இரு தரப்பிற்கும் இடையே எகிப்து, கட்டார், அமெரிக்கா ஆகிய நாடுகள் மத்தியஸ்தனாம் செய்து போர் நிருத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் இஸ்ரேல் ஹமாஸ் போர் நிறுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேலின் தேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் இடாமர் பென்-க்விர் பதவி விலகினார்.

மேலும், தற்போது இஸ்ரேலில் அமைந்துள்ள கூட்டணி அரசில் இடாமரின் ஓட்ஸ்ம் யெ/ஹுடிட் அங்கம் வகித்து வந்த நிலையில், அந்த கூட்டணியில் இருந்தும் விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதனால் மேலும் இரு அமைச்சர்களும் பதவி விலகியுள்ளனர்.

# அமெரிக்காவில் மீண்டும் டிக்டொக்!




அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தேசியப் பாதுகாப்பு காரணங்களை மேற்கோள் காட்டி, சீனாவின் பைட்டான்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான டிக்டொக் செயலியை 270 நாள்களுக்குள் விற்பனை செய்யும் சட்டத்தை இயற்றினார்.

அவ்வாறு விற்பனை செய்யத் தவறினால், டிக்டொக் செயலியை ஆப்பிள் மற்றும் கூகுள் பிளே ஸ்டோரில் இருந்து நீக்க உத்தர விடப்படும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் டிக்டொக் செயலிக்குக் கிட்டத்தட்ட 17 கோடி கணக்குகள் உள்ள நிலையில், நேற்று முன்தினம் முதல் இந்த செயலிக்கான தடை அமுலுக்கு வந்தது.


இதனையடுத்து, டிக்டொக் நிறுவனம் தற்காலிகமாக அதன் சேவையை நிறுத்துவதாக அறிவித்தது.

இதன்படி ஆப்பிள் ஐஸ்டோர் மற்றும் கூகுள் பிளேஸ்டோரிலிருந்து டிக்டொக் செயலி நீக்கப்பட்டது.

இந்தநிலையில், அமெரிக்காவில் டிக்டொக் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள டொனால்ட் டிரம்ப், டிக்டொக் செயலிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதாக உறுதியளித்ததையடுத்து, சேவையை மீண்டும் தொடங்குவதாக டிக்டொக் நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

# ஈரானின் பிரபல பாடகருக்கு மரண தண்டனை விதிப்பு!



ஈரானைச் சேர்ந்த பிரபல பொப் இசைப் பாடகரான அமீர் உசைன் மக்சவுத்லூவுக்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

37 வயதான அவர் ஈரானின் இளைய தலைமுறையினரின் அரசியல் மற்றும் சமூக அம்சங்கள் குறித்து அடிக்கடி வெளிப்படையாக பேசி சர்ச்சையில் சிக்கி வந்தார்.

மேலும், நபிகள் நாயகத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அதுமட்டுமல்லாது விபசாரத்தை ஊக்குவித்தல், அரசுக்கு எதிராக பிரசாரம் செய்தமை உள்ளிட்ட வழக்குகளும் அவருக்கு எதிராகத் தொடரப்பட்டன.

இந்த வழக்குகளில் தேடப்பட்ட பாடகர் அமீர் உசைன் 2018 ஆம் ஆண்டிலிருந்து துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இருந்த நிலையில் துருக்கி பொலிஸார் அவரை 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஈரானிடம் ஒப்படைத்தனர். அதன்பின்னர் ஈரானில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, வழக்கு விசாரணையின்போது, பாடகருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என அரசு தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வாதத்தை ஏற்ற உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளதாக உள்ளூர் ஊடகத்தில் செய்தி வெளியாகியுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இத் தீர்ப்பு இறுதியானது அல்ல என்றும், மேல்முறையீடு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.01.2025




இன்று உங்களுக்கு சிறப்பான சாதகமான நாள். இது உங்கள் கடின உழைப்பின் மூலம் சாத்தியம் ஆகும்.

உங்கள் பணியாற்றும் திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும்.

உங்கள் துணையுடன் ஒற்றுமையாக இருப்பீர்கள். இதனால் உங்களுக்கு மனதிருப்தி ஏற்படும். உங்கள் துணைக்கு மகிழ்ச்சி கிட்டும்.

எதிர்பாராத பணவரவு காணப்படும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக்கலாம்.




இன்று மனக்குழப்பத்துடன் காணப்படுவீர்கள். இதனால் ஆரோக்கியமற்ற மண் நிலையும் வேதனையும் காணப்படும். பிரார்த்தனை மற்றும் இசை கேட்டதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் சில சவால்கள் நிறைந்திருக்கும். சிறப்பாக திட்டமிட்டு பணியாற்றினால் உங்கள் செயல்திறன் சிறப்பான நிலையில் இருக்கும்.

உங்கள் பதற்றமான மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தைப் பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்துக்காக நீங்கள் பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வருத்தங்களை ஒதுக்கித் தள்ளுங்கள் அமைதியாக இருக்க வேண்டும். வெற்றிக்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

உங்கள் செயல்திறனில் அதிருப்தி காணப்படும். அதிகப் பணிகளை கையாள முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு பாதிக்கப்படும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். சேமிப்பது கடினமாக காணப்படும். உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பல் வலியால் பாதிக்கப்படலாம். தகுந்த சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சிறிய முயற்சியில் பெரிய விஷயங்களை சாதிப்பீர்கள்.இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் பங்கு பெற நேரலாம். உங்கள் மேலதிகாரிகள் இந்த சந்திப்பில் நீங்கள் பங்கு பெறும்முறை, உங்கள் கருத்து மற்றும் உங்கள் தகவல் பரிமாற்றம் கண்டு ஈர்க்கப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் நட்புடன் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் கடின உழைப்பு மற்றும் முயற்சி மூலம் இன்று பணவரவு காணப்படும். இன்று புதிய முதலீடுகளை செய்ய இயலும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியத்தை ஸ்திரமாக பராமரிப்பீர்கள்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலையும் திருப்தியையும் அளிக்கும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகளை பேசுவதை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும்.

இன்று தேவையற்ற செலவுகள் அதிகமாக காணப்படும். அதனால் பணம் அதிகமாக செலவாகும்.

தோல் சம்பந்தமான பிரச்சினை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்.




இன்று பதற்றப்படாமல் சமநிலையோடு இருங்கள். உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை நம்பிக்கையோடு சமாளிக்க வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக உங்களால் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. இன்று நீங்கள் சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினை காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனைப் போக்க மனம் திறந்து பேச வேண்டும். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று பணம் சம்பாதிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அதிக செலவுகள் காணப்படும்.




இன்றைய சூழ் நிலையில் நீங்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். தியானம் சிறந்த பலனைத் தரும். நம்பிக்கை அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க முறையாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்பட நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தலைவலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியான போக்கு சிறந்த பயன் அளிக்கும்.




வெற்றிகளை பெற்றுத் தரக்கூடிய உறுதியான முடிவுகளை எடுப்பீர்கள். கடினமான பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.இதனால் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். இருவரும் பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக இருக்கும் காரணத்தால் நீங்கள் பயனுள்ள முதலீடு செய்ய நினைப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.01.2025




இன்று மகிழ்ச்சியான நிகழ்வுகள் ஏற்படலாம். உங்கள் முன்னேற்றத்துக்காக நேரம் செலவு செய்வீர்கள். உங்கள் மென்மையான பேச்சு உங்கள் வெற்றிக்குச் சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் நல்ல பலனளிக்கும் வகையில் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். வேலை தொடர்பான பயணம் உங்களுக்கு நல்ல பலனளிக்கும்.

உங்கள் இனிமையான வார்த்தை மூலம் இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான சூழல் காணப்படும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் அன்புன் பெருகும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். சிறிய கடன் வகையில் இன்று பணம் பெருவீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் மன உறுதி காரணமாகஇன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். அதனால் உங்களால் சிறப்பாக செயலாற்ற இயலாது. உங்கள் செயல்களை சாதரண போக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால் சிறப்பாக பணியாற்ற இயலாது. முறையாக திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக கையாளலாம்.

இன்று உங்களிடம் மன உறுதி குறைந்து காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கபட்டும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதும் சேமிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகுவலி ஏற்படலாம்.




இன்று கோவில் சென்று சம்பிரதாய முறைப் படி வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். இதன் மூலம் அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தள்ளிப் போடவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் முறையாக திட்டமிட்டு ஒழுங்கமைப்பதன் மூலம் சிறப்பாக பணிகளைக் கையாளலாம்.

உங்கள் துணையிடம் இன்று தகவல் பரிமாற்ற சிக்கல் காணப்படும். அனுசரித்து புரிந்து கொள்வதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படுத்த இயலும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களுக்கு சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி மூலம் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமைக்கான புகழ் பெறுவீர்கள். உங்களுள் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்.

உங்கள் திடமான முயற்சி மூலம் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம். உங்கள் திறமை மற்றும் தகுது காரணமாக நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உற்சாகமான போக்கை கடைபிடிப்பதன் மூலம் உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை அனுபவிக்கலாம். இதனால் இனிமையும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சேமிப்பும் அதிகமாக காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது. உங்கள் மன உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.




## கண்டி - மஹியங்கனை வீதி நேற்று முதல் மூடப்பட்டது

கண்டி – மஹியங்கனை வீதி நேற்று மாலை 6:00 மணி முதல் மூடப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக இந்த வீதி மூடப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அந்த மார்க்கத்தில் கஹடகொல்ல பகுதியில் 44/1 கிலோ மீற்றர் தூண் அருகே மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பகுதியில் பாறைகள் இடிந்து விழும் அபாயம் இருப்பதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

## 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் குருநாகல் மாவட்டத்தின் ரிதிகம பகுதியிலும், மாத்தளை மாவட்டத்தில் லக்கலை, பல்லேகம, நாவுல, பல்லேபொல பகுதிகளிலும், பதுளை மாவட்டத்தில் பாததும்பர, பன்വில, மெததும்பர ஆகிய பகுதிகளிலும் முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கண்டி மாவட்டத்தில் உடுதும்பர, தொலுவ பகுதிகளிலும், மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை, வில்கமுவ, யட்டவத்தை, உக்குவளை பகுதிகளிலும் இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

